**පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක: 492**

**ආයතනයේ නම:** උතුරු පළාත යටතේ අමාත්‍යාංශය සහ දෙපාර්තමේන්තුව

**පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම**

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. – 492**

**நிறுவனத்தின் பெயர்: வடக்கு மாகாண சபையின்கீழ் உள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள்.**

**பாரளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.**

**PARLIAMENTARY SERIES NO – 492**

**Name of the institution: Ministry and Department under the Northern Province.**

**Submission of observation of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of standing order No.119(4)**

# Content



| Language | Page Number |
|---|---|
| | |
| Sinhala | 1 - 28 |
| Tamil | 29 - 56 |
| English | 57 - 82 |

| இல | திணைக்களத்தின் பெயர் | இருந்து | வரை |
|---|---|---|---|
| 1 | வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் | 29 | 30 |
| 2 | மாகாண விளையாட்டுத்திணைக்களம் | 31 | 32 |
| 3 | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் | 33 | |
| 4 | மாகாண சுகாதார அமைச்சு | 34 | |
| 5 | மாகாண கல்வித் திணைக்களம் | 35 | |
| 6 | மாகாண கல்வியமைச்சு | 36 | |
| 7 | மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் | 37 | |
| 8 | மாகாண விவசாயத்திணைக்களம் | 38 | 39 |
| 9 | மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் | 39 | |
| 10 | காணி நிர்வாகத் திணைக்களம் | 40 | |
| 11 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | 41 | |
| 12 | கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் | 42 | |
| 13 | வீதி அபிவிருத்தித் திணைக்களம் | 43 | |
| 14 | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | 43 | |
| 15 | கைத்தொழில் திணைக்களம் | 44 | |
| 16 | பேரவைச் செயலகம் | 45 | |
| 17 | உள்ளூராட்சி திணைக்களம் | 45 | |
| 18 | கட்டடங்கள் திணைக்களம் | 46 | |
| 19 | சிறுவர் நன்நடத்தை திணைக்களம் | 46 | |

| | | | |
|---|---|---|---|
| 20 | கிராம அபிவிருத்தி திணைக்களம் | 47 | |
| 21 | பிரதி பிரதம செயலாளர் அலுவலகம் - பொறியியில் | 47 | |
| 22 | மாகாண இறைவரித்திணைக்களம் | 48 | |
| 23 | மாகாண சமூகசேவைகள் திணைக்களம் | 49 | |
| 24 | பிரதி பிரதம செயலாளர் அலுவலகம் - ஆளணியும் பயிற்சியும் | 49 | |
| 25 | மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு | 50 | |
| 26 | மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | 50 | |
| 27 | மாகாண மகளிர் விவகார அமைச்சு | 51 | |
| 28 | மாகாண விவசாய அமைச்சு | 51 | |
| 29 | முதலமைச்சர் அலுவலகம் - உள்ளூராட்சி | 52 | |
| 30 | பிரதி பிரதம செயலாளர் அலுவலகம் - நிதி | 52 | |
| 31 | பிரதம செயலாளர் செயலகம் | 53 | |
| 32 | பிரதி பிரதம செயலாளர் அலுவலகம் - திட்டமிடல் | 53 | |
| 33 | வீதிப்போக்குவரத்து பயணிகள் அதிகார சபை | 54 | 55 |
| 34 | சுற்றுலாப்பணியகம் | 56 | |

| வட மாகாண ஆளுநர் செயலகம் | | |
|---|---|---|
| **பகுதி 1 87:00** | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை.** |
| | வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| | வருடாந்த பொருள் கணிப்பீட்ட சபை மூலம் பரிந்துரைக்கப்பட்ட மிகைகள் பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்போது சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய காலப்பகுதியில் வருடாந்த இருப்புக் கணிப்பீடு மற்றும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. |
| | ஒதுக்கு வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | தற்போது நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த அறிக்கைகள் உரிய காலப்பகுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுவருகின்றது |
| | ஒரு வாகனம் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்படவில்லை | குறித்த வாகனம் அகற்றப்பட்டுள்ளது |
| | மோட்டார் வாகன விபத்துக்கள் மற்றும் நட்டங்களுக்காக மாகாண நிதி விதிகளின்படி நடவடிக்கைகள் எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | நட்டமதிப்பீட்டு குழுவின் அறிக்கையினை பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. |
| | ஒரு வருடத்திற்கு நடாத்தப்படவேண்டிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டமானது காலாண்டு அடிப்படையில் உரிய திகதிகளில் நடாத்தப்பட்டுவருகின்றது. |
| | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட நிலுவைகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | மீதியினை அறவிடுவதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது |
| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியைதாண்டி ஊழியர்கள் இணைக்கப்பட்டிருந்தனர் | இரண்டாம் மட்ட பதவியணியில் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆளணியானது மேலதிகமாக காணப்படுகின்றது. எனினும் அப்பதவியணியானது பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் அரசாங்கத்தின் கொள்கையின் கீழ் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்களாவர். |

| | | |
|---|---|---|
| **பகுதி 2 71:00** | நிறுவனம் தனது எல்லைக்கு பொருந்தக்கூடிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணத்தவறியிருந்தது. | நிலைபேறு நோக்கங்கள் இனங்கானப்பட்டு அதன் பிரகாரம் அடைவு மட்டங்கள் அளவிடப்படுகின்றது |
| | அடையாளம் காணப்பட்ட நிலையான இலக்குகளை அடைவதற்காக எட்டப்படவேண்டிய இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறு நோக்கங்களின் அடைவு மட்டங்கள் தொடர்பிலான விபரங்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| | நிலையான அபிவிருத்தி இலக்குகளை செயல்படுத்துவதன் முன்னேற்றத்தினை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் (Indicators) அமைக்கப்பட்டிருக்கவில்லை. | குறிகாட்டிகள் மூலம் அடைவு மட்டம் அளவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| | 2018 ஜனவரி 24 ஆம் திகதியிட்ட 02/2018 எண்கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை விதிகளுக்கு இணங்க வரைவு செய்யப்பட்ட மனிதவளத்திட்டம் இருக்கவில்லை | மனிதவளத்திட்டம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| | ஊழியர்களின் திறனை தயாரிக்கப்பட்டிருந்த மனிதவள மேம்பாட்டுத் திட்டம 50% க்கும் அதிகமான ஊழியர்களுக்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணித்தியாலங்களுக்கும் குறையாத பயிற்சி வாய்ப்பை உறுதிசெய்யவில்லை | ஊழியர்களின் திறனை விருத்தி செய்வதற்கு தேவையான பயிற்சி வகுப்புக்கள் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகினால் கோரப்பட்டு அலுவலா்களுக்கு தேவையான பயிற்சிகள் இனங்காணப்பட்டு அவர்களது கடமைகளோடு தொடா்புபட்ட அல்லது தமக்கு தேவையானதென கருதப்படும் பயிற்சிகளுக்கு விண்ணப்பித்து பயிற்சிகளில் பங்குபற்றி வருகின்றனர். அதனை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| | ஓட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றுகை உடன்படிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டவருகின்றது. |
| | மனிதவள மேம்பாட்டுத்திட்டங்களைத் தயாரிப்பதற்கும் திறன் மற்றும் ஆளுமை மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பெயரிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார் |
| | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | 100% அடைவு மட்டத்தினை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது |
| | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற / பாதகமான மட்டத்தில் இருந்தது. | முனைப்பழியற்ற (un Qualified) கருத்தாக அமைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது |

| வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் | | |
|---|---|---|
| பகுதி 1 89:00 | அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை |
| | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரை இற்றைப்படுத்தி பயன்படுத்தப்படவில்லை. | தற்போது நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரை இற்றைப்படுத்டதப்பட்டுள்ளது |
| | அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 171/2004 மற்றும் 11.05.2004 ஆம் திகதியில் குறிப்பிட்டதன்படி மென்பொருளின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்சொற்கள் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை மாற்றப்படவில்லை. | தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. |
| | வருடாந்த செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | தற்போது வருடாந்த செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| | கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருட ஆரம்பத்தில் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | தற்போது இவ் ஆண்டுக்குரிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| | மாகாண நிதி ஒழுங்கு விதிக்கு இணங்க காலாவதியான வைப்புத் தொகைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்போது உரியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| | நிலுவையிலுள்ள கடனாளிகளின் நிலுவைகள் மீது காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படவில்லை. | நிலுவையிலுள்ள கடனாளிகளின் நிலுவைகள் மீதான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| **பகுதி 2 77:00** | நிறுவனத்தால் பராமரிக்கப்படும் இணையத்தளம், பொதுமக்கள் புகார்களைப் பதிவு செய்வதற்கோ அல்லது பாராட்டுக்களை தெரிவிப்பதற்கோ வாய்ப்பளிக்கப்படவில்லை | வடக்கு மாகாணத்திற்குரிய இணையத்தளத்தில் விளையாட்டுத்திணைக்கள வெப் தளத்தில் உரிய பின்னூட்டலை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| | 2018.01.24 ஆம் திகதிய ,05/2018 (1) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்டவாறு 2008.02.06 ஆம் திகதிய, 05/2008 (1)ஆம் இலக்க பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்திய பிரஜைகளின்/சேவை பெறுநர்களின் சாசனத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. |
| | நிறுவனத்தின் பிரஜைகள் / சேவை பெறுநர் சமவாயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| | ஒட்டுமொத்த பணியாட்தொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை | செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் ,வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% க்கும் குறைவாக இருந்தது | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற / பாதகமான மட்டத்தில் நிலவியது. | முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டு அவை சரிசெய்யப்பட்டுளதுடன் எதிர்காலத்தில் முனைப்பழியற்ற அபிப்பிராயத்தினை பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

| | வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்.** | **குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை.** |
| **பகுதி 1 81:00** | இருப்பு பொருள் பதிவேடு புதுப்பிக்கப்பட்ட நிலையில் பராமரிக்கப்படவில்லை | கையிருப்பு பதிவேடுகள் தற்போது முறையாகவும் புதுப்பிக்கப்பட்ட நிலையிலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இது வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு சபை மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. |
| | ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் ஆலோசித்து உள்கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்படவில்லை | அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் ஆண்டின் தொடக்கத்தில் உள்ளகணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டு தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்றது. |
| | உள்ளக்கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை | பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகள் மற்றும் மாவட்ட வைத்தியசாலைகளிலிருந்து பதில்களைப் பெறவும், அவற்றை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் தொகுக்கவும் காலதாமதம் ஏற்படுவதால் பதிலளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இத்தாமதத்தை குறைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| | உள்ளகக் கணக்காய்வு வினாக்களின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை | உள்ளக்கணக்காய்வு வினாக்களுக்கு வழங்கப்படும் பதில்களின் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்திடம் முறையாக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | பொருட்கள் கணக்கெடுப்பு சபையால் வெளிப்படுத்தப்பட்ட அதிகரிப்புகள், பற்றாக்குறைகள் மற்றும் பிற பரிந்துரைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் கவனத்திற் கொள்ளப் பட்டுள்ளன. எதிர்காலத்தில் தொடர்ச்சியான நடவடிக்கைகள் தாமதமின்றி நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| | வாகன ஓட்டப் பதிவேட்டின் பிரதிகள் மற்றும் மாதாந்த பொழிப்பக்கள் கணக்காய்வாளர் நாயகத்திடம் முறையாக சமர்ப்பிக்கப்படவில்லை | தினசரி ஓட்டப் பதிவேட்டின் பிரதிகள் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்வாளர் நாயகத்திடம் தொடர்ச்சியாக சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. |
| | கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதத்திற்கும் மேலாக பதலளிப்பதில் தாமதம் ஏற்பட்டது | பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகள் மற்றும் மாவட்ட வைத்தியசாலைகளிலிருந்து பதில்களைப் பெறவும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் அவற்றை தொகுக்கவும் நேரம் எடுத்துக்கொள்ளப்படுவதால் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| | ஒரு ஆண்டை மீறிய நிலுவைத் தொகைகள் தீர்வு செய்யப்படவில்லை | இவ்விடயம் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு வருகின்றது. மீளப் பெறப்படாத நிலுவைத் தொகைகளை படிப்படியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| **பகுதி 2 86:00** | நிறுவனத்தினது கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயமானது முனைப்பழியுள்ள/மறுக்கப்பட்ட/பாதகமான கருத்தாக உள்ளது. | காணி,கட்டடம் மற்றும் சொத்துக்களினது மதிப்பீடு சிகாஸ் மென்பொருளில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | வடமாகாண சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை.** |
| **பகுதி 1 95:00** | ஆண்டுக்கான செயற்றிட்டம் தயாரிக்கப்படவில்லை. | இது சரிசெய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த செயற்றிட்டம் தயாரிக்கப்படுகின்றது. |
| | மாகாண நிதி ஒழுங்குவிதிகளின்படி, உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் சிரேஸ்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வில்லை. | இனிவருங்காலங்களில், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் சிரேஸ்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. |
| | நாளாந்த வாகன ஓட்டப் பதிவுகள் மற்றும் மாதாந்த அறிக்கைகள் என்பன சிரேஸ்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் ஒழுங்குமுறையாகச் சமர்ப்பிக்கப்பட வில்லை. | நாளாந்த மற்றும் மாதாந்த வாகன ஓட்டப் பதிவுகள், அறிக்கை சிரேஸ்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதனை ஒழுங்குபடுத்துவற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| **பகுதி 2 80:00** | பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்காதது குறித்துப் பெறப்பட்ட முறைப்பாடுகளை ஆவணப் படுத்தவும், அத்தகைய முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விளக்கங்களை வழங்கவும் எந்தப் பதிவேடுகளும் பராமரிக்கப்படவில்லை. | பொதுமக்கள் குறை தீர்க்கும் முறைமையொன்று உருவாக்கப்படும். முறைப்பாட்டுப் பெட்டியொன்று பொருத்துவதற்கும் நடவடிக்கையெடுக்கப்படும். |
| | நிறுவனத்தால் குடிமக்கள்/வாடிக்கையாளர் சாசனம் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்ய ஒரு வழிமுறை வகுக்கப்படவில்லை. | பொதுமக்கள் சாசனம்/ குடிமக்கள் பட்டயம் திருத்தப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. |
| | 24 ஜனவரி 2018 தேதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 02/2018 இன் விதிகளுக்கு இணங்க உருவாக்கப்பட்ட ஒரு மனிதவளத் திட்டம் கிடைக்கவில்லை. மனிதவள மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், திறன் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல் படுத்துவதற்கும் நிறுவனத்தின் ஒரு மூத்த அதிகாரி நியமிக்கப்படவில்லை. | மனிதவளத் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் சிரேஸ்ட உதவிச் செயலாளர் (SAS) இவற்றுக்குப் பொறுப்பான அதிகாரியாக நியமிக்கப்படடுள்ளார். |
| | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில், வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50%க்கும் குறைவாக இருந்தது. தயாரிப்பதற்கும், திறன் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல் படுத்துவதற்கும் நிறுவனத்தின் ஒரு மூத்த அதிகாரி நியமிக்கப்படவில்லை. திட்டமிடப் பட்ட பயிற்சி வாய்ப்புகளில், வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50%க்கும் குறைவாக இருந்தது. | 2025ஆம் ஆண்டில், நிர்வாகம், தாபன விடயம், செயற்கை நுண்ணறிவு, உற்பத்தித்திறன் சார்ந்த வெளிக்கள விஜயம் மற்றும் தகவல் தொழினுட்பம் சார்ந்த 22 பயிற்சிகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டு, அவற்றில் 35 அலுவலர்கள் பங்கேற்றனர். 2026ஆம் ஆண்டில், மனித வளத்துறையின் திறன் மேம்பாட்டை உறுதி செய்வதற்காக, மேலும் அதிகமான அலுவலர்கள் பங்கேற்பார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. |

| வடமாகாண கல்வித் திணைக்களம் | | |
|---|---|---|
| **பகுதி 1 90:00** | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை.** |
| | நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு இற்றைப்படுத்தி பேணப்படவில்லை. | தற்போது முறையாக இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| | விடுமுறை பதிவேடு இற்றைப்படுத்தி பேணப்படவில்லை. | தற்போது முறையாக இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது |
| | கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்து வருட ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது |
| | 94(1) இன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தியதன் பின் ஆண்டின் இறுதியிலிருந்த ஒதுக்கீட்டுகளைக் காட்டிலும் பொறுப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. | தற்போது ஒதுக்கீட்டினை விஞ்சாத வகையில் பொறுப்புக்கள் காட்டப்படுவது கவனத்திற் கொள்ளப்படுகின்றது. |
| | நிலுவையானது ஒரு வருடம் கடந்த நிலையிலும் சீர் செய்யப்படாது காணப்படுகின்றது | சீராக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| **பகுதி 90:00** | அரச உத்தியோகத்தர்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை. | தகுதியான அலுவலர்களிடமிருந்து உரிய காலத்தில் சொத்துப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற / பாதகமான மட்டத்தில் நிலவியது. | முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டு அவை சரிசெய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் முனைப்பழியற்ற அபிப்பிராயத்தினை பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

| வடமாகாண கல்வி அமைச்சு | | |
|---|---|---|
| **பகுதி 1 91:00** | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை.** |
| | மாகாண நிதி ஒழுங்குமுறைகளின் படி உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.எதிர்வரும் வருடங்களில் உள்ளகக்கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படும் |
| | மாகாண நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் வழங்கப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டுநிதி 14 நாட்களுக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை. | நிமித்த உப கட்டுநிதி பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கே வழங்கப்படுகின்றது.குறித்த தேவை நிறைவடைந்ததும் அமைச்சிற்கு சீர் செய்யப்படுகின்றது |
| | ஒரு மாதத்திற்கும் மேலாக கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிப்பதில் தாமதம் ஏற்பட்டமை. | தற்போது கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய பதில்கள் உரிய காலத்தில் வழங்கப்படுகின்றது. |
| | சில செலவுத் தலைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி முழுமையாக சேமிப்பாக காணப்பட்டமை. | குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.எதிர்காலத்தில் இந்நிலமையினை சீர்செய்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. |
| **பகுதி 2 89:00** | உத்தியோகத்தர்களால் அரசாங்கத்திற்கோ அல்லது மாகாண சபைக்கோ ஏற்பட்ட இழப்பை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | தற்போது மாகாண நிதிவிதிகளின் பிரகாரம் சீர்செய்யப்பட்டுள்ளது. |
| | மாகாண நிதி விதிகளின் படி மேலதிகமாக செலுத்தப்பட்ட கட்டணங்கள் வசூலிக்கப்படவில்லை. | அறவிடப்படவேண்டிய தொகைக்கான நினைவூட்டல் கடிதங்கள் 25.05.2026 ஆம் திகதி பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |
| | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | 2024 இல் வருடத்திற்கான திட்டத்தில் 100% பயிற்சி வாய்ப்புக்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. |
| | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான /ஒப்புதளிக்க மறுக்கின்ற /பாதகமான மட்டத்தில் நிலவியது. | முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டு அவை சரிசெய்யப்பட்டுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டிற்கு முனைப்பழியற்ற அபிப்பிராயம் பெறப்பட்டுள்ளது. |

| | வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள** | **குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை** |
| **பகுதி:1 91:00** | 11.05.2004 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைவாக மென்பொருள் அமைப்பின் 1து, 2வது மற்றும் 3வதுகடவுச் சொற்கள் மாற்றப்படவில்லை. | தற்போது சுற்றறிக்கை இல 171/2004 ற்கமைவாக சம்பள பொதிக்குரிய கடவுச் சொற்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாற்றம் செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது |
| | மாகாண நிதி ஒழுங்கு விதிகளின் படி உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் திபதிக்கு அனுப்பப்படவில்லை. | தற்பொழுது உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்களின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. |
| | அனைத்து வாகனங்களின் உரிமையையும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இல்லை. | நீர்பாசனத்திணைக்களத்தின் 96 வாகனங்களில் 06 வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் பிரதம செயலாளரின் பெயரில் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மிகுதி 06 வாகனங்களுக்குரிய உரிமை மாற்றுவதற்கான ஆவணங்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| | 08 மாதங்கள் கடந்த நிலையிலும் பதிவழிப்பு செய்ய பரிந்துரைக்கப்பட்ட வாகனங்கள் பதிவழிக்கப்படவில்லை | எமது நீர்பாசன திணைக்களத்தின் 02 மோட்டார் சைக்கிள்களுக்கு ஏல விற்பனைக்கான நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டு மாகாண திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது |
| | ஆண்டு தோறும் நடாத்தப்பட வேண்டிய கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | ஒவ்வொரு காலாண்டுக்கு ஒரு முறை கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம் நடைபெற்று வருகின்றது. |
| | செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடுகள் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு, உள்நாட்டு விடுமுறை காரணமாக சம்பளக் குறியீட்டிலும் ஏனைய மீண்டுவரும் செலவின விடயங்களில் கட்டுப்படுத்தல் காரணமாகவும் மீண்டுவரும் செலவினங்களின் ஒருபகுதி CIAP திட்டத்தின் நிர்வாகச் செலவினூடாக மேற்கொள்ளப்பட்டமையாலும் சேமிப்புக்கள் ஏற்பட்டன.<br>மேலும் இவ் ஒதுக்கீட்டு மீதி ஏனைய திணைக்களங்களுக்கு வழங்கும் நோக்கில் திறைசேரிக்கு வழங்கப்பட்டது. |
| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமான பணியாளர்கள் இணைக்கப்பட்டனர் அல்லது ஆட்சேர்க்கப்பட்டனர். | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட ஆளணி 520 தற்போதைய ஆளணி 319 வெற்றிடம் 201 எனவே மேலதிக ஆளணியினர் எவரும் உள்வாங்கப்படவில்லை. |
| **பகுதி:2 91:00** | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான/ ஒப்புதலளிக்க மறுக்கின்ற/ பாதகமான மட்டத்தில் நிலவியது | முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டு அவை சரிசெய்யப்பட்டுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டிற்கு முனைப்பழியற்ற அபிப்பிராயம் பெறநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | வடமாகாண விவசாயத் திணைக்களம் | |
|---|---|---|
| **பகுதி 1 89:00** | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை.** |
| | அனைத்து வாகனங்களின் உரிமையையும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இல்லை. | திணைக்களத்திற்குச் சொந்தமான 130 வாகனங்களில் 16 வாகனங்கள் மட்டும் இதுவரை பிரதம செயலாளர் வடக்கு மாகாணம் அவர்களின் பெயருக்கு உரிமை மாற்றப்படாது காணப்படுகிறது.<br><br>இவற்றில் 08 வாகனங்களிற்கான உரிமை மாற்றப்படிவங்கள் அனைத்தும் பூர்த்தியாக்கப்பட்டு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும் அவை மூடப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களினால் எமக்கு ஒப்படைக்கப்பட்டமையால் அவற்றுக்கு கட்டுப்பாட்டாளர் நாயகம் கொழும்பு அவர்களின் ஒப்பம் பெறுவதில் சிக்கல் காணப்படுவதுடன் பெயர் மாற்றம் செய்வதில் தாமதம் ஏற்படுகின்றது. மாற்றப்படாமலும் மீதமுள்ள 08 வாகனங்களின் மூல ஆவணங்கள் மற்றும் பதிவுப் புத்தகங்கள் இன்மையால் அடிச்சட்ட மற்றும் இயந்திர இலக்கங்களினை அடையாளம் காண்பதில் சிக்கல் காணப்படுவதால் பலதடவை முயற்சிசெய்தும் எம்மால் பெயர் மாற்றத்திற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எட்டமுடியவில்லை. |
| | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் மாகாண நிதி விதிக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | சிறந்த விவசாயிகளுக்கான NVQ சான்றிதழ் வழங்கும் செயற்றிட்டம் தேசிய தொழில் பயிலுநர் அதிகார சபையுடன் (NAITA) இணைந்ததாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் தமிழ் மொழியில் போதிய பயிற்சி வழங்குனர்கள் இல்லாத காரணத்தினால் தாமதப்படுகின்றது. இச்செயற்றிட்டத்தின் மீதியாக 2023இல் ரூபா 1,950,000.00 காணப்பட்டதுடன் இத் தொகையில் முறையே 2024இல் ரூபா.290,000.00, 2025 இல் ரூபா.434,000.00, 2026இல் இதுவரை ரூபா.630,000.00 உம் செலவு செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது மிகுதியாகவுள்ள ரூபா.596,000.00 ஐ இவ்வாண்டு இறுதிக்குள் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>பிடிபணமாக வைப்பில் வைக்கப்பட்டிருந்த ரூபா.12,500.00 மற்றும் ரூபா.124,433.50 என்பன வைப்பிலிருந்து மீளளிக்கப்பட்டுள்ளது. |
| | கணக்காய்வு அவதானிப்புகளுக்கு பதிலளிப்பதற்கு ஒரு மாதத்திற்கும் மேலான கால தாமதம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் **05** மாவட்ட அலுவலகங்கள் மற்றும் அதன் கீழுலுள்ள பண்ணைகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டு தொகுப்பாக்கி அனுப்ப வேண்டியிருப்பதால் கடந்த காலங்களில் சில தாமதங்கள் ஏற்பட்டன. |

| | | |
|---|---|---|
| | | அதனை சீர்செய்யக்கூடிய வகையில் இனிவரும் காலங்களில் குறித்த காலப்பகுதிக்குள் இடைக்காலப்பதிலொன்றினை அனுப்பவதற்கும் இறுதியான பதிலினையும் கூடியளவு விரைவாக அனுப்பவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| | சில செலவுத் தலைப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீடுகள் முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்த சில சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | செலவீனங்களுக்காக எந்தவொரு வாக்குத் தலைப்புகளின் கீழும் 2023 நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் சேமிப்பு ஏற்படவில்லை |
| **பகுதி 2**<br>**95:00** | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான/ ஒப்புதலளிக்க மறுக்கின்ற/ பாதகமான மட்டத்தில் நிலவியது | முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டு அவை சரிசெய்யப்பட்டுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டிற்கு முனைப்பழியற்ற அபிப்பிராயம் பெறநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| **வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்** | | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை** |
| **பகுதி– 01**<br>**95:00** | கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசித்த பின்பு ஆண்டின் தொடக்கத்தில் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | 2025 ஆண்டு முதல் சீர்செய்யப்பட்டுள்ளது. |
| | மாகாண நிதி ஒழுங்கு முறைகளில் உள்ள விதிகளின் படி வருடாந்த பொருட் கணக்கெடுப்பு அறிக்கைகள் தலைமைக் கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | தற்போது அனைத்து வருடாந்த பொருட்கணக்கெடுப்பு புத்தகங்களும் 5 பிரதிகளில் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று வழங்கப்படும் |
| | வாகன நாளாந்த ஓட்டக் குறிப்பேடுகளின் மாதாந்தப் பொழிப்புக்கள் தலைமைக் கணக்காய்வாளரிடம் உரிய காலங்களில் சமர்ப்பிக்கப்படவில்லை. | தற்போது அனைத்து வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்பேடுகளின் மாதாந்தப் பொழிப்புக்கள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுகின்றன. |
| **பகுதி– 02**<br>**89.00** | பொது மக்களால் வழங்கப்படும் முறைப்பாடுகளுக்கு மற்றும் அதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குரிய பதிவேடுகள் பேணப்படவில்லை. | பெறப்படும் முறைப்பாடுகளுக்கு கோவை மாவட்ட அடிப்படையில் பராமரிக்கப்படுகின்றது. தற்போது முறைப்பாட்டு பதிவேடு நடைமுளைப்படுத்தப்படுகின்றது. |

| | வடமாகாண காணி நிர்வாகத் திணைக்களம் | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை** |
| **பகுதி 1 -97:00** | மாகாண நாணய விதிகளுக்கு அமைவாக அரசாங்க வைப்புக் கணக்கில் காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொது வைப்பில் காணப்பட்ட வைப்புக்கள் யாவும் நிதி ஒழுங்கு விதிக்கமைய 2024 ஆம் ஆண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு எமது வைப்புக் கணக்கு மீதியில் எவ்வித மீதிகளும் காணப்படவில்லை. |
| **பகுதி 2 -87:00** | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற /பாதகமான மட்டத்தில் நிலவியது | உடையார்கட்டு மற்றும் சிவநகர் விடுதிக் காணிக்கான கையளிப்பு ஆவணங்கள் காணி ஆணையாளரின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டு அப் பெறுமதியே சொத்தாக உள்வாங்கப்பட்டுள்ளது. இவை தொடர்பான ஆவணங்களை எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் என்பதனை அறியத்தருகின்றேன். |

| | வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை** |
| **பகுதி 01 100.00** | - | - |
| **பகுதி 02 86:00** | முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தின் அடிப்படை<br>i. கணக்கீட்டுக் குறைபாடுகள்<br>மீளாய்வாண்டில் வவுனியா மாவட்ட பயிற்சி பாடசாலையில் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்காக ரூபா.388,677 செலவினம் ஏற்பட்டிருந்தது. அச் செலவினம் மூலதன செலவினமாக காட்டப்பட்டு சொத்தாக்கம் செய்வதற்கு பதிலாக கட்டிட பராமரிப்பு செலவாக காட்டப்பட்டிருந்தது. | வவுனியா கூட்டுறவு பயிற்சி நிறுவனத்திற்கு சொந்தமான அலுவலக கட்டிடம் என்பன நீண்ட காலம் இராணுவ பாவனையில் (2009ம் ஆண்டு தொடக்கம்) இருந்து வருகின்றது. இதனை விடுவிப்பதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் முயற்சிகள் பலனளிக்கவில்லை இதன் காரணமாக 2023ல் வவுனியா செயலகத்தினால் தமக்கு சொந்தமான கட்டிடத்தினை இராணுவப்பயன்பாட்டிலிருந்து இருந்து எமக்குரிய கட்டிடத்தை விடுவிக்கும் வரை பயன்படுத்துவதற்கு கையளிக்கப்பட்டது. மேற்படி கட்டடத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கட்கான பயிற்சி நெறி இடம்பெறுவதால் வாகன தரிப்பிடம் அவசியமாக தேவைப்பட்டது. மேற்படி கட்டடம் எமது திணைக்களத்திற்கு சொந்தமில்லாத போதும் அவசியமான பராமரிப்பு அவசிய தேவைகருதி பராமரிப்பு செலவுத்தலைப்பு 472-53-3-1303 எனும் தலைப்பின் கீழ் ரூ.388,677 செலவு செய்யப்பட்டது. எமக்கு சொந்தமில்லாத கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட்ட அவசியான செலவு என்பதனால் மூலதன செலவாக தாக்கல் செய்யப்படவில்லை |
| | ii. சொத்துக்கள் முகாமைத்துவம் - குறைபயன்பாடுடைய சொத்துக்கள்<br>07 எண்ணிக்கையான வாகனங்கள் ரூபா 410000 பெறுமதியானவை கடந்த 06 வருடங்களிற்கு மேலாக பயன்பாடின்றியும் பழுதடைந்த நிலையிலும் திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாது அலுவலகத்தில் காணப்பட்டிருந்தது. | WP JM 8038 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் ஐக்கிய நாடுகள் உதவித்திட்டத்தின் அடிப்படையில் (UNDP) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டதாகும். இது திணைக்களத்தின் பாவனையில் காணப்பட்டமையால் சொத்து என்ற அடிப்படையில் உள்வாங்கப்படுள்ளது. மேற்படி மோட்டார் வாகனத்தினை பிரதம செயலாளர், வடமாகாணம் என்ற பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பரிசோதகர் அறிக்கை பெற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பரிசோதகர் அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் முடிவுறுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குறித்த 06 மோட்டார் சைக்கிள்களும் தற்போது ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளன. |

| | வடமாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | |
|---|---|---|
| **பகுதி 1 94.00** | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை** |
| | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| | அனைத்து வாகனங்களின் உரிமையையும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இல்லை. | தற்பொழுது சகல வாகனங்களும் பிரதம செயலாளரின் பெயரில் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| | சில செலவீனங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடுகள் முழுவதுமாகச் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மாங்குளத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற மாகாணப் பணிப்பாளர் அலுவலக கட்டட வேலைகளுக்குரிய செலவினமே 100% சேமிப்பாகக் காணப்பட்டது. தற்பொழுது தொடர்ந்து வரும் ஆண்டுகளில் மேற்படி கட்டடமானது நிர்மானிக்கப்பட்டு வருகின்றது. |
| | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் இருந்த தொகைகள் செலுத்தப்படவில்லை | பதவி வெறிதாக்கப்பட்ட திணைக்களத் தொழிலாளியான திரு.சி.சாந்தரூபன் மீளவும் சேவைக்கு இணைக்கப்பட்டு அவரது நிலுவைகள் முழுமையாக சீர்செய்யப்பட்டுள்ளது.<br><br>பதவி வெறிதாக்கப்பட்ட அலுவலர்களில் திரு.லு.துசியந்தன் சாரதியினால் திணைக்களத்திற்கு வருமதியாகவுள்ள தொகையினை பெற்றுக்கொள்வதற்கு அவரது பிணைதாரர்கள் இருவரிடம் இருந்தும் தற்பொழுது மாதாந்தம் ரூபா.2827.00 வீதம் அறவிடப்பட்டு வருகின்றது.<br><br>பதவி வெறிதாக்கப்பட்ட திரு.ஏ.சந்திரகாசன் - திணைக்களத் தொழிலாளியால் திணைக்களத்திற்கு வருமதியாகவுள்ள (ரூபா.209,875) தொகையினை பெற்றுக்கொள்வதற்கு உரிய சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு NP/26/01/04/DL/062/12 இலக்க 01.08.2024 ஆம் திகதிய கடிதமூலம் சட்ட அலுவலலர், பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாணம் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. அதற்கமைவாக சட்ட அலுவலர் மூலம் குறிப்பிட்ட அலுவலருக்கு Letter of Demand அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் குறித்த அலுவலர் குறிப்பிட்ட முகவரியில் இல்லை என கடிதம் திரும்பி வந்தமையினால் அவ்வலுவலரின் கிராம அலுவலர் ஊடாக மீளவும் மேற்படி இடர் கடனை செலுத்துமாறு குறித்த அலுவலருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| **பகுதி 2 94.00** | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான/ ஒப்புதலளிக்க மறுக்கின்ற/ பாதகமான மட்டத்தில் நிலவியது | முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டு அவை சரிசெய்யப்பட்டுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டிற்கு முனைப்பழியற்ற அபிப்பிராயம் பெறநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை** |
| **பகுதி 1 -100** | | |
| **பகுதி 2 -88** | நிறுவனத்தினால் ஈடேற்றப்படுகின்ற செயற்பொறுப்புடன் தொடர்புடைய 03 பிரதான செயலாற்றுகை சுட்டிகள் இனம் காணப்படவில்லை. | தாக்க மதிப்பீட்டைச் செயற்படுத்தும் குறிகாட்டிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றைச் செயல்படுத்துவதற்கான திட்டம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

| | வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை** |
| **பகுதி 02 89:00** | ஒட்டுமொத்த பணியாட்தொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை | திணைக்களத்தின் அனைத்துப் பணியாளர்களுக்கும் செயலாற்றுகை உடன்படிக்கைகள் வருடாந்தம் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டுள்ளன. |

| | வடமாகாண கைத்தொழில்கள் திணைக்களம் | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை.** |
| பகுதி 01<br>95:00 | அனைத்து வானங்களின் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கையிருப்பில் இல்லை. பயன்பாட்டிற்கு தகுதியற்றதாக அறிவிக்கப்பட்ட வாகனம், அவ்வாறு அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து 8 மாதங்களுக்குள் அகற்றப்படவில்லை. காலாவதியான வைப்பு தொகைகள் தொடர்பாக மாகாண நிதி விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அனைத்து வாகனங்களுக்கும் உரிமையை உறுதிப்படுத்தும் வாகனப் பதிவுச் சான்றிதழ் மூலப்பிரதிகள் கையிருப்பில் உள்ளன.<br><br>EPUR -5000 இலக்க மோட்டார் சைக்கிள் புத்தகப்பிரதி மட்டும் தொலைந்தமையினால் மாகாண மோட்டார் பொக்குவரத்து திணைக்களத்தினால் கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு புத்தகப்பிரதி பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>NPKK – 6555 இலக்க REXON வாகனம் கௌரவ ஆளுநர் செயலகத்தினால் பயன்படுத்திய காலத்தில் 2013ஆம் ஆண்டு ஏற்பட்ட விபத்து தொடர்பான வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நடைபெற்று வருவதால் குறித்த வாகனம் தொடர்பான மேலதிக நடவடிக்கை எதையும் மேற்கொள்ள வேண்டாம் என பிரதம செயலாளர் அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>திணைக்களத்திற்கு சொந்தமான கடைகள் பொது அமைப்புகளுக்கு வாடகைக்கு விடப்படும் பொழுது பெற்றுக்கொன்ட முற்பணம் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது கடை வாடகை ஒப்பந்தம் நிறைவுபெறும் போது அத்தொகை திருப்பி செலுத்தப்படும் |
| பகுதி 02<br>95:00 | நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பாக கணக்கய்வாளர் வழங்கிய கணக்காய்வு கருத்து தகுதியுடனான கருத்து / கருத்து தெரிவிக்க இயலாமை கருத்து / பாதகமான கருத்து ஆகும். | மீளாய்வாண்டில் ரூபா 20,000 பெறுமதியான நீர்த்தாங்கி கொள்வனவு செய்யப்பட்டு ஏனைய செலவின விடயங்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் செலவினமாக காட்டப்பட்டிருந்தது. |

| வடமாகாண பேரவைச் செயலகம் | | |
|---|---|---|
| **பகுதி:1 99:00** | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை** |
| | அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட்தொகுதியினர் இணைக்கப்பட்டு அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்கள் | அலுவலகத்திற்குரிய அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தருக்குரிய ஆளணி 06 ஆக காணப்பட்டிருந்த போதிலும் 2023 இல் மேலதிக ஒரு ஆளணி உள்ளிட்ட மொத்தம் 07 ஆளணியினர் காணப்பட்டிருந்தனர். எனினும் பின்னரான காலப்பகுதியில் இரு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றம் மற்றும் அபிவிருத்தி உத்தியகோத்தர் ஒருவரின் பதவி வெறிதாக்கல் காரணமாக தற்போது 04 ஆளணியினரே காணப்படுகின்றனர். |
| **பகுதி:2 92:00** | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான/ஒப்புதலளிக்க மறுக்கின்ற /பாதகமான மட்டத்தில் நிலவியது. குறிக்கப்பட்ட காரணங்கள் வருமாறு: | முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான குறைபாடுகள் அடையாளம் காணப்பட்ட அவை சரிசெய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் முனைப்பழியற்ற அபிப்பிராயத்தினை பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

| | வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களம் | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை.** |
| **பகுதி 1 -96** | நிலையான சொத்துக்கள் ஏடு கால அடிப்படையில் பூரணப்படுத்தி பேணப்படாதிருந்தது | தற்போது கால அடிப்படையில் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| | 2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச் சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்படவில்லை. | தற்போது கடவுச் சொற்கள் மாற்றப்படுகின்றது. |
| | மாகாண நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டுநிதி 14 நாட்களுக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை. | தற்போது குறித்த காலத்திற்குள் செலுத்தி தீர்க்கப்படுகின்றது.. |
| **பகுதி 2- 95** | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான/ ஒப்புதலளிக்கின்ற மறுக்கின்ற / பாதகமான மட்டத்தில் நிலவியது. | தகுதியான கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

| | வடமாகாண கட்டடங்கள் திணைக்களம் | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்.** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை.** |
| **பகுதி 2 92:00** | நிதிக்கூற்றுக்கள் மீதான முனைப்பளி கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்பட்டது. | நிறைவடைந்த வேலைகளினதும் மோட்டார் வாகனத்தினதும் பெறுமதி மதிக்கப்பட்டு நிதியல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| | வடமாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்.** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை.** |
| **பகுதி I** | வாகன ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்தம் வாகன ஓட்டப் பொழிப்புகள் கணக்காய்வு அலுவலத்திற்கு தவறாமல் அனுப்பப்படுவதில்லை. | குறித்த விடயத்திற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வாகன ஓட்டப் பொழிப்புகள் தொகுக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்டு தற்போது உரிய காலப்பகுதிக்குள் சரியான முறையில் கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்றன. |

| | வடமாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களம் | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை/ தற்போதைய நிலை.** |
| **பகுதி 1-97.00** | கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்து வருட ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | தற்போது உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்து திட்டம் அனுமதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது |
| | ஒதுக்கு வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எமது திணைக்களத்தில் ஒதுக்கு(Assign) வாகனம் பாவனையில் இல்லை என்பதுடன் தற்போது பாவனையில் உள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் தற்போது உரிய காலத்தில் கணக்காய்வு அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| **பகுதி 2 96.00** | நிறுவனத்தின் பிரசைகள்/சேவை பெறுனர் சமவாயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | பிரசைகள் /சேவை பெறுநர் பட்டயம் அமுலாக்கப்படுதல், மேற்பார்வை செய்வதற்கும் மற்றும் மதிப்பீடு செய்வதற்கும் பொறுப்பான உத்தியோகத்தர் 2024.08.01ம் திகதி முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார் |

| | வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் (பொறியியல்) | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை.** |
| **Part 2 93:00** | நிறுவனத்தால் குடிமகன்/ வாடிக்கையாளரின் விண்ணப்பத்தைக் கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் ஒரு வழிமுறை வகுக்கப்படவில்லை. | குறித்த தவறு தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது |

| | வடமாகாண இறைவரித் திணைக்களம் | |
|---|---|---|
| தொ.இல | அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை. |
| பகுதி 1 99.00 | அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட்தொகுதியினர் இணைக்கப்பட்டு அல்லது ஆட்சேர்க்கப்பட்டுள்ளமை. | எமது திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கையானது 08 ஆக காணப்படுகின்றது. எனினும் தற்போது 10 அபிவிருத்தி உத்தியோகத்கள் கடமையாற்றுகின்றனர். மேலதிக ஆளணியானது 02 ஆக காணப்படுகின்றது. இவர்கள் இருவரும் வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரரை பதவிக்கு அமர்த்துதல் என்னும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட PS/CM/OMC/15/2020 ஆம் இலக்க 2020.02.18 திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் கீழ் நியமனம் வழங்கப்பட்டு வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் செய்யப்பட்டு எமது திணைக்களத்திற்கு பணிக்கமர்த்தப்பட்டவர்களாவர்.<br>இவர்களுக்குரிய ஆளணி அனுமதிக்கு 2025 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆளணி மீளாய்வின்போது எம்மால் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் இதுவரை எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை. |
| பகுதி 2 95.00 | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளரின் அபிப்பிராயம் தகுதியான/ஐயத்தன்மை/மறுதளிக்கின்ற பாதகமான மட்டத்தில் உள்ளது. | வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் திணைக்களத்தின் நிதியல்லா சொத்துக்களில வாகனத்தின் பெறுமதியானது மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை என்பது கணக்கீட்டுக்குறைபாடாக இனங்காணப்பட்டு முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது.<br>தற்போது வாகனமானது மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அதன் புதிய மீள்மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா. 8,950,000.00 ஆனது நிதியல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

| | வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை.** |
| **பகுதி 01**<br>**99.00** | 2004.05.11 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 171/2004 இன் பிரகாரம் மென்பொருள் அமைப்புக்களில் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்சொற்கள் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் மாற்றப்படவில்லை. | மென்பொருள் அமைப்புக்களின் கடவுச் சொற்கள் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன. |

| | வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் (ஆளணி மற்றும் பயிற்சி) | |
|---|---|---|
| | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை.** |
| **பகுதி 2**<br>**95:00** | மீளாய்வாண்டின் இறுதியில் கட்டடங்கள் முடிவுறுத்தப்படாத நிலையிலிருந்தது ஆனால் இன்னமும் பூரணப்படுத்தப்பட்டிராத வேலைகளின் நிர்மாணக் கிரயம் கூட்டுமொத்தம் ரூபா.50,180,000 மற்றும் ஏனைய இயந்திரங்களும், உபகரணங்களும் வகுதியைச் சேர்ந்த ஐந்து உருப்படிகளின் பெறுமதிகளின் வேறுபாடு கூட்டுமொத்தம் ரூபா.3,701,401 காரணமாக சிஹாஸ் மென்பொதியில் செயன்முறைப்படுத்தப்பட்டிருந்தவாறான நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதிக்கும் மீளாய்வாண்டிற்கான நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த நிதியல்லா சொத்துக்களின் பெறுமதிக்குமிடையே கூட்டுமொத்த வேறுபாடு ரூபா.53,881,401 அவதானிக்கப்பட்டது. | கட்டடங்கள், இயந்திரங்கள், மற்றும் உபகரணங்கள் முதலியவற்றின் பொறுமதிகள் சிஹாஸ் மென்பொதியின் நிதியல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டு குறித்த வழு சீர்செய்யப்பட்டுள்ளது. |
| | நிதியல்லாச் சொத்துக்கள் பற்றிய கூற்றின் (ஏசீஏ 6) பிரகாரம் மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா.161,710 கிரயப் பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்ததாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் விற்பனை மூலம் பெறப்பட்டிருந்த வருமானங்களின் கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா.115,695 காசுப்பாய்ச்சல் கூற்றில் (ஏசீஏ-சீ) முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் என்ற தலைப்பின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விற்பனை மூலம் பெறப்பட்ட வருமானத்தை தவறுதலாக நானாவித வருமானத்தில் கணக்கெடுத்த காரணத்தினால் குறித்த வழு ஏற்பட்டது. இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறு ஏற்படாதவாறு கணக்கீடு செய்யப்பட்டுவருகின்றது. |

| வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு | | |
|---|---|---|
| **பகுதி 1 95:00** | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்.** | **குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை.** |
| | கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படவில்லை. | தற்போது கணக்காய்வு ஐயவினாப்பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுகின்றுது |
| | கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்து வருட ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | |
|---|---|---|
| | **குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை/ தற்போதைய நிலை** |
| **பகுதி 1 -100** | | |
| **பகுதி 2 -96** | நிறுவனத்தின் பிரசைகள் / சேவை பெறுநர் சமவாயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | பொ.நி.சுற்றறிக்கை இல. 05/2008- 06/02/2008 இற்கு அமைவாக 2024 ஆம் ஆண்டிலிருந்து மூன்று பேர் கொண்ட கண்காணிப்புக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அவர்களினால் 2024 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு காலண்டிற்குரிய கண்காணிப்பு அறிக்கை இன்றுவரை சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு அவர்களின் பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. |

| | வடமாகாண மகளிர் விவகார அமைச்சு | |
|---|---|---|
| | **குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலை.** |
| **பகுதி 01**<br><br>**99.00** | 2004.05.11 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. 171/2004 இன் பிரகாரம் மென்பொருள் அமைப்புக்களில் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்சொற்கள் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் மாற்றப்படவில்லை. | மென்பொருள் அமைப்புக்களின் கடவுச் சொற்கள் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன. |
| **பகுதி 02**<br>**97** | - | - |

| | வடமாகாண விவசாய அமைச்சு | |
|---|---|---|
| **பகுதி 1**<br>**98.00** | **அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதய நிலை.** |
| | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் இருந்த தொகைகள் செலுத்தப்படவில்லை | குறித்த உத்தியோகத்தர் மருத்துவக் காரணங்களினால் ஓய்வுத் திகதிக்கு முன்னரே ஓய்வுபெற்றுச் சென்றமையால் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்ய முடியாதுள்ளதாகத் தெரிவித்ததற்கு அமைவாக மேற்படி உத்தியோகத்தரிடமிருந்து கடனினை அறவிடமுடியாத நிலை காணப்பட்டது. எனினும் குறித்த இடர்கடன் நிலுவையான ரூபா 145,457.00 ஐ உத்தியோகத்தரின் வேண்டுகோளுக்கு அமைவாக அவர் ஓய்வு பெறும் திகதியாகிய 18.12.2026 இல் ஓய்வூதியப் பணிக்கொடையில் இருந்து அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | வடமாகாண முதலமைச்சர் அலுவலகம் - உள்ளூராட்சி | |
|---|---|---|
| | **குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை/ தற்போதைய நிலை** |
| **பகுதி 1 – 100:00** | | |
| **பகுதி 2 – 99.00** | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வீதம் 2024 ஆம் ஆண்டு 55% ஆக அதிகரித்துள்ளதுடன், 2025 ஆம் ஆண்டு 86% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. |

| | வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் (நிதி) | |
|---|---|---|
| **Se.No** | **குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை/ தற்போதைய நிலை** |
| Part1 99 | அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமான ஆளணி காணப்பட்டுள்ளது. | எமது அலுவலகத்தின் சேவை நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுப்பதை உறுதிப்படுத்துவதற்காக இரண்டாம் மட்ட பதிவியணி ஆளணிகளுக்கு மேலதிக முன்மொழிவுகள் தேசிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினாலும், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான ஆளணி வெற்றிடங்கள் நிலவியதன் காரணத்தினாலும், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேலதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்டனர். |

## வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகம்

பகுதி1 மற்றும் பகுதி 2 – 100:00

## வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் (திட்டமிடல்)

பகுதி1 மற்றும் பகுதி 2 – 100:00

| | வடமாகாண வீதி போக்குவரத்து பயணிகள் அதிகாரசபை | |
|---|---|---|
| | **குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்** | **குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை/ தற்போதைய நிலை** |
| **பகுதி 1 -80** | வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள்,பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை. | தற்போது பேணப்படுகிறது. |
| | ஒதுக்க வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | தற்போது அனுப்பி வைக்கப்படுகிறது. |
| | உரிய திகதியில் வங்கி இணக்க கூற்றுக்களைத் தயாரித்து உறுதிப்படுத்தி அவை கணக்காய்வின் பொருட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. | தற்போது சமர்பிக்கப்படுகிறது |
| | நிலையான சொத்துக்கள் பதிவேடு கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை. | தற்போது பராமரிக்கப்படுகிறது. |
| | உள்ளக்க கணக்காய்வு ஐயவினா ஆவணம் கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை. | தற்போது பராமரிக்கப்படுகிறது. |
| | கடன்பட்டோர் ஏடு நாளாந்த அடிப்படையில் பூரணப்படுத்தி பேணப்படவில்லை. | தற்போது பேணப்படுகிறது |
| | சேதங்கள் பற்றிய ஆவணம் கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை | தற்போது பராமரிக்கப்படுகிறது |
| | வருடாந்த செயட்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. |
| | வருடாந்த பெறுகைக் திட்டம் தயாரிக்கப்படவில்லை | தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது |
| | கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்து வருட ஆரம்பத்தில்உள்ளகக் கணக்காய்வு நிகழ்சிசித்திட்டம் தயாரிக்கப்படவில்லை | தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது |
| | 2018.08.01ஆம் திகதிக்கு பின்னர் அனைத்து உள்ளக் கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்பிக்கவில்லை. | தற்போது சமர்பிக்கப்படுகிறது |
| | உள்ளக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை | தற்போது சமர்பிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| **பகுதி 2-48** | தகவலறிதல் சட்டத்திணங்க தகவலை வழங்குவதற்கு குறித்துரைத்த அலுவலரொருவர் நியமிக்கப்படவில்லை. | தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். |
| | கேட்கப்படுகின்ற தகவலை வழங்காதிருத்தல். | தற்போது வழங்கப்படுகிறது. |
| | தகவல் அறியும் சட்டதினூடக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை பதிவதற்கு பதிவேடு பேணவரப்படவில்லை. | தற்போது பேணப்படுகிறது. |
| | நிறுவனம் பற்றி பொதுமக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்கு வெப்தளம் ஒன்று தயாரிக்கப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை. | தற்போது பேணப்படுகிறது. |
| | நிறுவனம் பற்றி பொதுமக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்கு வெப்தளம் மூலமாக பொதுமக்களுக்கு முறைப்பாடுகள், அல்லது பாராட்டுகளை குறிப்புப் பதிவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை | தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது |
| | நிறுவனத்தின் பிரசைகள் சமவாயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செயவதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியலொன்று தயாரிக்கப்படவில்லை. | தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது |
| | பொது நிருவாக ஏற்பாடுகளுக்கு இணங்க முறையான மனிதவளத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை. | தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. |
| | 50% மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்த பட்சம் 12 மணி நேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பை வழங்குதல் உறுதி செய்யவில்லை. | தற்போது செய்யப்பட்டுள்ளது. |
| | ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கதக்க செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | தற்போது செய்யப்பட்டுள்ளது. |
| | மனித வளத்திட்டங்களை தயாரிக்கவும் கொள்திறன் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்கும் நிறுவனத்தில் சிரேட்ட அலுவலரொருவர் நியமிக்கப்படவில்லை. | தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். |
| | திட்டமிட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது |
| | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியாள் பாதகமான மட்டத்தில் நிலவியது. | தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது |
| | நிறுவனத்தினால் ஈடேற்றப்படுகின்ற செயற்பொறுப்புடன் தொடர்புடைய 03 பிரதான செயலாற்றுகை இணங்காணப்பட்டிருக்கவில்லை. | தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது |

| | வடமாகாண சுற்றுலாத்துறை பணியகம் | |
|---|---|---|
| | குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை சீர்செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை/ தற்போதைய நிலை. |
| பகுதி 1 -99 | சில செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருப்பதற்கான சில சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டுள்ளது | 2023 ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைக்கப்பெறவில்லை எனவே எம்மால் பாதீட்டில் இடப்பட்ட செலவினங்களை மேற்கொள்ள இயலவில்லை. எதிர்வரும் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் வருமானங்களுக்கு ஏற்ப பாதீடு தயாரிக்கப்படும் |
| பகுதி 2-88 | பொதுமக்களால் கேட்கப்படுகின்ற தகவல்களை வழங்குதல் / வழங்காதிருத்தல் சம்பந்தமான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணிவரப்படவில்லை. கேட்கப்படுகின்ற தகவல்களை வழங்காதிருத்தல் சம்பந்தமாக முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளை பதிதல் மற்றும் அது சம்பந்தமாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி தெளிவுபடுத்துகின்ற பதிவேடுகள் பேணிவரப்படவில்லைநிறுவனத்தின் பிரசைகள் / சேவைபெறுனர் சாசனம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியலொன்று தயாரிக்கப்படவிருக்கவில்லை | தற்போது பொதுமக்கள் கேட்கின்ற தகவல்களை / முறைப்பாடுகளை பதிவதற்கு பதிவேடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது அத்துடன் பிரசைகள் / சேவைபெறுனர் சாசனம் தயாரிக்கப்பட்டுள்ளது |

தனுஜா முருகேசன்
பணிப்பாளர்
வட மாகாணம்